அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

## தமிழ் - ஆண்டு 8

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

பறவை இனங்களிலே மிகவும் பெரிய பறவை தீக்கோழி ஆகும். தீக்கோழியை நெருப்புக்கோழி என்றும் அழைப்பர். இது ஆபிரிக்கக் காட்டுப்பகுதிகளில் வாழ்கிறது. இதன் வாழ்க்கைக் காலம் நாற்பத்தைந்து ஆண்டுகளாகும். தீக்கோழிகளில் ஆண் கறுப்பு நிறத்திலும் பெண் பழுப்பு நிறத்திலும் காணப்படுகின்றன. தீக்கோழியின் கால்களும் கழுத்தும் நீண்டிருக்கும். இதனுடைய கால்களில் இரண்டு விரல்கள் மட்டுமே உள்ளன. தீக்கோழிகள் வேகமாக ஓடக்கூடியன. பறவை இனங்களில் தீக்கோழியின் முட்டையே மிகவும் பெரிய முட்டை. தீக்கோழியானது கிழங்குகள், பழங்கள், விதைகள், ஊர்வன போன்வற்றைத் தனது உணவாக உட்கொள்கிறது. பத்துக்கு மேற்பட்ட தீக்கோழிகள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுக் குடும்பமாகவே வாழ்கின்றன.